[26th March 1964

னுக்காக பதிவு செய்து கொள்கிருர்கள். ஆகவே பதிவு செய்யப்பட்ட நம்பர் பிரகாரம் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது அரசாங்கம் என்னவெல்லாம் செய்யவேண்டுமோ, அதனைச் செய்கிறது. குறிப்பாக ஏதாவது யோசனை சொன்னுல் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: பொதுவாக ஆண்கள் கல்லூரிகளில் பெண்களை அனுமதிப்பதுபோன்று, அவசியம் ஏற்பட்டால், பெண்கள் கல்லூரிகளிலும் ஆண்கள் அனுமதிக்கப்படுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவது புரட்சிகரமான கருத்து. அவ்வளவு புரட்சிகரமாக இல்லை நாங்கள். பெண்கள் கல்லூரிகளில் ஆண்களைச் சேர்ப்பதில்லை. பெண்கள் கல்லூரி இருக்கிற இடத்தில், ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்ப்பதில்லை என்று பல்கலைக் கழகம் வற்புறுத்தி வருகிறது.

கிராமத் தொழில்களுக்கு அரசாங்க மானியம்

* 407 கேள்வி—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்கள் கிராமத் தொழில்களைத் துவக்க மானியம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது? எப்போது கொடுக்கப்படுகிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் போர்டு மூலமாக, கிராமத் தொழில் வளத் திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 50,000 மானியமாகக் கிடைக்கும். ஆரம்பத்தில் மானிய இனங்களின் செலவினைப் பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து முதலில் செய்துவிட்டு பின்னர் வேலை நிறைவேறியபின் அந்த மானியத் தொகையை கிராமத் தொழில் வள மாவட்ட அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திரு. ம. கமலநாதன்: கிராமத் தொழில்கள் எத்தனை என்று அரசாங்கம் வரையறுத்திருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: Approved model programme சர்க்காரிலிருந்து போட்டிருக்கிறேம். அவைகள் 9: Blacksmithy carpentry, bee-keeping, brick-making, pottery, tannery. distribution of imported tools at half the cost, lime-kiln, tailoring and embroidering.

26th March 1964]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: இதுபோன்ற கூட்டுறவு மன்றங்களில் அநேக தொழிற்சாலைகள் வைத்து, அவைகள் மிகவும் உபயோகமாக இருந்தும், அதற்கு வேண்டிய 'ரா-மெடீரியல்ஸ்' நாகத் தகடுகள், இரும்புத் தகடுகள் எந்த இலாகாவிலிருந்து சப்ளை செய்யப்படுகிறது. அவ்வாறு 'ரா-மெடீரியல்' காலதாமதம் இல்லாமல் கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி 'ரா-மெடீரியல்ஸ்' கிடைக்கவில்லை என்றால் கிராம கைத்தொழில் போர்டின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அப்படியில்லை என்றால் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் செலவு செய்து கொள்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். கிராமக் கைத்தொழிலுக்காக மட்டும் அந்த ரூபாயை செலவு செய்ய அனுமதிக்கப்படுகிறதா? அல்லது அந்தத் தொழிலை வைத்து நடத்துவதற்கு கட்டடம் கட்டுவதற்கும் இதிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தொழிலுக்காகத் தான் அனுமதிக்கப்படுகிறது. ரூ. 50,000 போக, கிராண்ட்ஸ் அல்லாமல், 'வொர்கிங் லோன் காபிடல்' வழங்கப்படுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: எல்லா பஞ்சாயத்து யூனியனுக்கும் தலா ரூ. 50,000 அனுமதிக்கப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை பஞ்சாயத்து யூனியன்கள் இந்தச் சலுகைகளை பெற்று வருகின்றன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எல்லா பஞ்சாயத்து யூனியன்களும்தான். ஆனால் எத்தனை என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: இதே போன்று தொழில்களுக்கு எந்த இலாகாவிலிருந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு 'ரா-மெடீரியல்ஸ்' கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அநேகமாக இண்டஸ்டிரீஸ் இலாகாவிலிருந்துதான் தகடுகள் போன்ற சப்ளை செய்யவேண்டும். கிராமக் கைத்தொழில் போர்டுக்கு தகவல் கொடுக்கலாம். சர்க்காருக்கும் காப்பி அனுப்பினால், வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: பிப்ரவரி-மார்ச்சுடன் இந்தத் திட்டத்தில் இருக்கக்கூடிய பணச் செலவு செய்யப்பட்டு விடுகிறது. இனிமேல் பிளாக்கு லெவலில் இருக்கக்கூடிய 'ஜெனரல்

பண்டிலிருந்து' தான் செலவழிக்க வேண்டும் என்று சொல்லப் படுகிறது. அப்படியிருந்தால் ஜெனரல் பண்டிலிருந்து செலவழிப் பதற்கு கஷ்டப்படுமே. ஏதாவது இதற்காக தனியாக நிதி ஒதுக்குவது பற்றி சர்க்கார் யோசிக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மொத்தத்தில் குறிப்பிட்ட தொழில்களுக்காக ரூ. 50,000 வழங்கப்படுகிறது. சூழ்நிலை, அங்குள்ள 'ரா-மெடீரியல்ஸ்' எல்லாவற்றையும் பொறுத்து இருக் கிறது ஒரு தொழிலை ஆரம்பிப்பது. எல்லா தொழில்களையும் ஒவ்வொரு பிளாக்கிலும் ஆரம்பிப்பதற்கு பணம் போதாது. இருக் கக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு, அங்குள்ள நிலை, 'ரா- மெடீரியல்ஸ்' வசதி ஆகியவைகளைப் பொறுத்து எந்தத் தொழில் களை செய்யலாமோ, அந்தத் தொழில்களை மாத்திரம் வைத்துக் கொள்ளலாம்.

திரு. ம. கமலநாதன்: எத்தனை தொழில்கள் என்று கேட்ட தற்கு கனம் அமைச்சர் அவர்கள் 9 என்று சொன்னார்கள். 'மிட். டேர்ம் ரெவியூவில்' 12 கிராம கைத்தொழில்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியா, கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியது சரியா என்று அறிய விரும்புகிறேன். 'டிபார்ட்மெண்டல் யூனிட்' எத்தனை இருக் கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: முன்பு அப்ரூவ் செய்தது 1962-ம் ஆண்டில் 7. பின்னாலே 1963-ம் ஆண்டில் 'லேம் கிலன்' டைலரிங் யூனிட்', அதோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. மற்ற திட்டங்கள் ஏராளமாக 27, 28 திட்டங்கள் இருக்கின்றன.

திரு. து. ப. அழகமுத்து: பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராமக் கைத்தொழில்களுக்காக ரூ. 50,000 ஒவ்வொரு யூனியனுக் கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'ஈ. ஓ. பார் இண்டஸ்டிரீஸ்', பல பஞ்சாயத்து யூனியன்களில் இல்லாததினால், அந்தப்பணம் செலவழிக்கப் படாமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி ஏதாவது இருந்தால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் கவனிக்கிறேன். சில பஞ்சாயத்து யூனியன்களில் 'இண்டஸ்டிரீஸ் ஈ. ஓ.' இதுவரை யிலும், 'அபாயிண்டு' செய்யவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியும்.

திரு. மு. பொ. வடிவேலு: கிராமக் கைத்தொழில்களில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காததினால், பல யூனியன்களில் கிராமக் கைத்தொழில்கள் தொடங்குவது தாமதப்படுகிறது என் பது உண்மையா? அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறது?

26th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் என்ற பிரச்னை இல்லை. அங்குள்ள வேலைஞர்களை வைத்து அவர் களுக்கு டிரையினிங் கொடுத்து பின்னாலே அந்த இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்கவேண்டுமென்பதுதான் திட்டத்தின் அடிப்படை.

திருமதி சி. குழந்தையம்மாள் : சென்ற ஆண்டு என் தொகுதி யில் உள்ள டெக்ஸ்டைல் கம்பெனிக்கு பீடர் இண்டஸ்டிரியாக அருகாமையில் உள்ள சாமக்குளம் பஞ்சாயத்து யூனியனிலே ஒரு தொழில் ஸ்தாபனம் வேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பட்டது. எமெர்ஜென்ஸி காரணமாக பணம் இல்லை, நிறுத்தி வைக்கவேண்டும் என்று பதில் வந்திருக்கிறது. மேற்கொண்டு எப்பொழுது துவங்குவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது? இந்த எமெர்ஜென்ஸி, தொடர்ந்து இருந்துகொண்டிருக்குமா? மேலும் இதற்கு ஏதாவது பணம் கொடுக்க முன்வருவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எமெர்ஜென்ஸி இருக்கிறதா, இல்லையா என்று முடிவு செய்வது நம் கையில் இல்லை. அந்நியர் போய்விட்டால் நாளைக்கேகூட 'லிப்டு' பண்ணிவிடலாம். இது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட பிரச்னை. தனிப்பட்ட முறையில் தனிக் கேள்வி போட்டாலோ அல்லது எனக்கு எழுதி அனுப்பி ளுலோ, வேண்டியதைச் செய்யலாம்.

திரு. மு. பொ. வடிவேலு : கனம் அமைச்சர் அவர்கள் கிராமத்திலுள்ளவர்கள் அங்கு பயிற்சி பெறுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு ஆசிரியர் அங்கு கிடைப்பதில்லை. உதாரணமாக, மண்பாண்ட தொழிற்சாலை சம்பந்தமாக மற்றவர் களுக்குச் சொல்லிக்கொடுக்க ஆசிரியர் 'ஸ்கில்டு அஸிஸ்டெண்டு' இல்லாததினால், அந்த யூனிட் தொடங்கப்படாமல் இருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. சே. ம. மஜீத் : அம்மாதிரி விஷயங்களை என் னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

Dealth in Police lock-up

*408 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a youth by name Doss died in the Police lock-up in the Mount Road Police station (D-11 Police station) on 28th December 1963 : and

(*b*) if so, the reasons therefor?

The HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A suspect named Doss, who was lodged in the Police station on the night of 27th December 1963 in connection with a theft, committed suicide at night by hanging.